துணைப்பிரிவு 866

Tamil | தமிழ்

இந்தியா



# Protection visa

## Protection visa குறித்த கருத்துகளை மாற்றவும்

**ஒரு Protection visa (துணைப்பிரிவு 866) என்பது ஒருவரின் சொந்த நாட்டில் குறிப்பிடத்தக்க தீங்கு அல்லது துன்புறுத்தலின் உண்மையான ஆபத்தை எதிர்கொள்ளும் உண்மையான புகலிடக் கோரிக்கையாளர்களுக்கானது.**

ஆஸ்திரேலிய அரசாங்கம் இப்போது Protection visa இற்கு விண்ணப்பிப்பது பற்றி நினைக்கும் மக்களுக்கு **இலவச சட்ட ஆலோசனை அணுகல்களை** வழங்குகிறது. இந்த ஆலோசனையானது சாத்தியமான விண்ணப்பதாரர்கள் தகுதியானவர்களா என்பதைக் கண்டறியவும், தவறான ஆலோசனைகளை வழங்கக்கூடிய பதிவுசெய்யப்படாத குடிவரவு ஆலோசகரைப் பயன்படுத்தும் நபர்களின் அபாயங்களைக் குறைக்கவும் உதவும்.

**Protection visa இற்கு விண்ணப்பிப்பது பற்றி யோசிப்பவர்களுக்கு இந்த உண்மைத் தாள் அத்தியாவசிய தகவல் மற்றும் முக்கிய விவரங்களை வழங்குகிறது.**

## உண்மைகள் எவை?

Protection visas **உண்மையான புகலிடக் கோரிக்கையாளர்களுக்கானது.** ஆஸ்திரேலியாவில் நீண்ட காலம் தங்கி வேலை செய்ய விரும்புபவர்களுக்கானது அல்ல

Protection visa விண்ணப்பத்தில் தவறான தகவல்களை வழங்கினால் **சிறை மற்றும் பாரிய அபராதம்** விதிக்கப்படலாம்

உங்கள் Protection visa விண்ணப்பம் மறுக்கப்பட்டால், உங்களுக்கோ அல்லது உங்கள் குடும்பத்தினருக்கோ எப்போதும் **ஆஸ்திரேலியாவுக்குத் திரும்புவது** கடினமாக இருக்கலாம்

Protection visa மறுக்கப்படுகின்ற வீதம் சராசரியாக **85% க்கு மேல் உள்ளது**

**இந்திய நாட்டினரின் Protection visa விண்ணப்பங்களின் மறுப்பு வீதம் அதிகூடிய மறுப்பு வீதங்களில் ஒன்று. 2023-24 இல் முடிவு செய்யப்பட்ட இந்திய விண்ணப்பங்களில்** 97% தேவைகளைப் பூர்த்தி செய்யவில்லை மற்றும் மறுக்கப்பட்டன

நீங்கள் எதற்காக விண்ணப்பிக்கிறீர்கள், என்ன தகவல்கள் வழங்கப்படுகின்றன என்பதைப் புரிந்துகொள்ளாமல் உங்களுக்காக Protection visa இற்கு எவரையும் விண்ணப்பிக்கவிட **வேண்டாம்**

உங்கள் விண்ணப்பத்தில் உள்ள அனைத்தும் உண்மை என்பதை **நீங்கள் கட்டாயமாக** உறுதிப்படுத்த வேண்டும், வேறு எவராவது உங்களுக்காக அதைப் பூர்த்தி செய்தாலும் கூட

## தகுதி

தாயகம் திரும்பினால் **குறிப்பிடத்தக்க தீங்கு விளைவிக்கும் உண்மையான ஆபத்தை எதிர்கொள்ளும்** அல்லது துன்புறுத்தப்படுவதற்கான உண்மையான வாய்ப்பு உள்ள நபர்களுக்கு (அல்லது அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு ) உரியதே Protection visas ஆகும்.

- இனம்
- மதம்
- தேசியம்
- ஒரு குறிப்பிட்ட சமூகக் குழுவின் உறுப்பினர் அல்லது
- அரசியல் கருத்து

## தவறான தகவல்

Protection visa குறித்து அவுஸ்திரேலிய மற்றும் வெளிநாடுகளில் வசிப்பவர்களுக்கு பல தவறான தகவல்கள் வழங்கப்படுகிறது, இது Protection visa விண்ணப்பதாரர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு **கடுமையான விளைவுகளை** ஏற்படுத்தலாம். Protection visas உண்மையான புகலிடக் கோரிக்கையாளர்களுக்கானது. ஆஸ்திரேலியாவில் நீண்ட காலம் தங்கி வேலை செய்ய விரும்புபவர்களுக்கானது **அவை அல்ல**.

அண்மைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், பெரும்பாலான புதிய Protection visa விண்ணப்பங்கள் இப்போது **கிட்டத்தட்ட 8 மடங்கு வேகமாக** முடிவு செய்யப்படுகின்றன.

## தவறான அல்லது தவறாக வழிநடத்தும் தகவலை வழங்குதல்

நீங்கள் தவறான ஆவணங்களை வழங்கினால் அல்லது Protection visa விண்ணப்பத்தில் தவறான அல்லது தவறாக வழிநடத்தும் தகவலை வழங்கினால், நீங்கள் **பாரிய அபராதம்** மற்றும் **10 ஆண்டுகள்** வரை **சிறைத்தண்டனையை** சந்திக்க நேரிடும் என்பதை புரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

## உங்களுக்குப் Protection visa மறுக்கப்பட்டால்

உங்கள் Protection visa விண்ணப்பம் மறுக்கப்பட்டு, நீங்கள் செல்லுபடியானதொரு விசாவை வைத்திருக்கவில்லை என்றால், **நீங்கள் ஆஸ்திரேலியாவை விட்டு வெளியேற வேண்டும்.** உங்களிடம் செல்லுபடியாகும் விசா ஒன்று இல்லையென்றால், நீங்கள் ஆஸ்திரேலியாவில் இருந்து **Australian Border Force (ஆஸ்திரேலிய எல்லைப் படையினரால்)** தடுத்து வைக்கப்பட்டு அகற்றப்படலாம்.

மேலும் அறிய homeaffairs.gov.au/protection ஐப் பார்வையிடவும்

Australian Government

# Protection visa

## Protection visas குறித்த கருத்தை மாற்றவும்

முதலில் சிறப்பு அகதி மற்றும் குடிவரவு சட்ட வழங்குநரிடமிருந்து இலவச சட்ட ஆலோசனையைப் பெறாமல் Protection விசாவிற்கு விண்ணப்பிக்க வேண்டாம்.

### நினைவில் கொள்ள வேண்டியவை

- **உங்கள் மாநிலம் அல்லது ஆள்புலத்தில் உள்ள சிறப்பு அகதிகள் மற்றும் குடிவரவு சட்ட வழங்குநர்களிடமிருந்து** இலவச சட்ட ஆலோசனையைப் பெறவும்
- Protection visaகள் பற்றிய **கூடுதல் தகவல்களை** அறிய homeaffairs.gov.au/protection ஐப் பார்வையிடவும்
- குடிவரவு முகவர்கள் பதிவு அதிகாரசபை (OMARA) அலுவலக இணையத்தளத்துக்குச் சென்று உங்கள் குடிவரவு ஆலோசனை சட்டப்பூர்வமானதா என்பதை உறுதிப்படுத்த **பதிவுசெய்யப்பட்ட குடிவரவு முகவரைத்** தேடுங்கள்
- உங்களையும் உங்கள் சமூகத்தையும் பாதுகாக்கவும். பெயரடையாளம் குறிப்பிடாமல் ஆஸ்திரேலியாவின் பார்டர் வாட்ச்க்கு **பதிவு செய்யப்படாத குடிவரவு ஆலோசகர்கள் குறித்துப் புகாரளிக்கவும்**
- **மாற்று விசா விருப்பத்தேர்வுகள்** உங்களுக்குப் பொருத்தமானதா என்பதைக் கண்டறியவும், உள்நாட்டு அலுவல்கள் இணையதளத்தில் Visa Finder webpage ஐப் பார்வையிடவும்



### மறுக்கப்பட்ட விண்ணப்பத்தின் விளைவுகள்

ஆஸ்திரேலியாவில் மறுக்கப்பட்ட Protection visa விண்ணப்பம் **உங்கள் குடிவரவுப் பதிவில் இருக்கும்,** இது உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் எதிர்காலத்தில் ஆஸ்திரேலியா செல்வதை கடினமாக்கலாம். நீங்கள் விண்ணப்பிக்கும் விசா வகையைப் பொறுத்து, எதிர்காலத்தில் உலகம் முழுவதும் உள்ள பிற நாடுகளுக்கான விசா விண்ணப்பங்களையும் இது பாதிக்கலாம். ஆஸ்திரேலியாவில் இருக்கும் போது நீங்கள் பெரும்பாலும் மற்ற விசாக்களுக்கு விண்ணப்பிக்க அனுமதிக்கப்பட மாட்டீர்கள்.

### குடிவரவு முகவர்கள்

ஆஸ்திரேலியாவில், குடிவரவு முகவர்கள், குடிவரவு முகவர்கள் பதிவு அதிகாரசபையின் (OMARA) அலுவலகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். **ஒரு முகவர் பதிவு செய்யப்பட்டுள்ளாரா** என்பதைச் சரிபார்க்க இணையதளத்தைப் பார்வையிடலாம்.

பதிவுசெய்யப்பட்ட குடிவரவு முகவராகவோ அல்லது ஆஸ்திரேலிய சட்ட நிபுணராகவோ இல்லாத ஒருவர் குடிவரவு ஆலோசனைக்கு கட்டணம் அறவிடுவது **சட்டவிரோதமானது.** பதிவுசெய்யப்பட்ட குடிவரவு முகவர் அல்லது ஆஸ்திரேலிய சட்ட நிபுணராக இல்லாத ஒருவரிடமிருந்து ஆலோசனையைப் பெறும்போது, நீங்கள் தவறான தகவலின் அடிப்படையில் செயல்படுவதாகக் காணப்படலாம், இது ஆஸ்திரேலியாவில் **தங்குவதற்கான எந்த வாய்ப்பையும் ஆபத்துக்குள்ளாக்கலாம்**.

பதிவு செய்யப்படாத குடிவரவு ஆலோசகர்கள் பெரும்பாலும் சமூக ஊடகங்களிலும் இணையவழி அரட்டை குழுக்களிலும் (online chat groups) தங்கள் சேவைகளை விளம்பரப்படுத்துகிறார்கள். அவர்கள் சில சமயங்களில் விண்ணப்பதாரர்களிடம் தவறான அல்லது தவறாக வழிநடத்தும் தகவல்களை வழங்குமாறு அல்லது பாதுகாப்பு விசாவிற்கு விண்ணப்பிக்கும் போது தவறான ஆவணங்களை வழங்குமாறும் கூறுகிறார்கள், மேலும் சிலர் இந்த தவறான ஆலோசனைக்காக **பெருந்தொகைப் பணத்தை அறவிடுகிறார்கள்**.

யாராவது உங்களுக்கு சட்டவிரோத குடிவரவு ஆலோசனையை வழங்க முயற்சித்தால், Border Watch Online Report (பார்டர் வாட்ச் இணையவழிப் புகாரளிப்பு) பயன்படுத்தி எங்களிடம் தெரிவிக்கலாம். உங்கள் பெயரை நீங்கள் குறிப்பிட வேண்டியதில்லை.

### சமூகங்களின் பங்கு

ஆஸ்திரேலியாவில் வசிக்கும் சமூகங்கள், Protection visa இற்கு விண்ணப்பிப்பவர்களுக்கு **தவறான தகவல் பரவுவதைத் தடுப்பதில்** முக்கியப் பங்கு வகிக்கிறது, **Protection visa என்பது வேலை விசா அல்ல** என்பதை சாத்தியமான விண்ணப்பதாரர்களுக்குத் தெரிவிப்பதையும் இது உள்ளடக்கும்.

Protection visa விண்ணப்பத்தில் **தவறான அல்லது தவறாக வழிநடத்தும் தகவல்களைச் சமர்ப்பிப்பதாலும்,** பதிவு செய்யப்படாத குடிவரவு ஆலோசகரை ஈடுபடுத்துவதாலும் **ஏற்படும் அபாயங்கள்** பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் சமூகங்கள் உதவலாம்.

பாதுகாப்பு விசாவிற்கு விண்ணப்பிக்கும் ஒருவர் உங்களிடம் ஆதரவுக் கடிதம் எழுதுமாறு கோரினால், அந்த நபர் **உண்மையான புகலிடக் கோரிக்கையாளர்** என்று நீங்கள் நம்பினால் மட்டுமே நீங்கள் இதைச் செய்ய வேண்டும். .

அவர்களின் மாநிலம் அல்லது ஆள்புலத்தில் உள்ள சிறப்பு **அகதி மற்றும் குடிவரவு** சட்ட வழங்குநரிடமிருந்து இலவச சட்ட ஆலோசனையைப் பெற நபரை ஊக்குவிக்கவும்.

மேலும் அறிய homeaffairs.gov.au/protection ஐப் பார்வையிடவும்

Australian Government